*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://tamilmanam.in/
Issue DOI: https://doi.org/10.63300/tm09012026

# Inferiority Complex portrayed in the short stories of S.Ramakrishnan

**Dr. J. Arun Kumar*,**

Assistant Professor, Department of Tamil, Madras Christian College, Tambaram, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-0081-5085.
*Correspondence : arunjk1226@gmail.com, Tel: +919677151281

**To Cite this Article**
Dr. J.Arun Kumar "Inferiority Complex portrayed in the short stories of S.Ramakrishnan", *Tamilmanam International Journal of Tamil Studies*, Vol. 7, Issue 02, February 2026, pp.-563-572.

**Article Info**
Received on 01-Feb-2026, Revised on 10-Feb-2026, Accepted on 11-Feb-2026, Published on 20-Feb-2026

## ABSTRACT

*Literature helps to portray the lives of people and their culture. Various types of literature have emerged in the Tamil language according to the needs of the time. There are many types of literature in the Tamil literary field such as poetry, short stories, novels. Among these, short story literature has gained uniqueness. The adoption of the short story form in Tamil literature during the twentieth century was catalyzed by European literary influence. Its growth was substantially supported by key periodicals, including Manikodi and Ananda Vikatan, which provided crucial platforms for publication. This encouraged the rise of many Tamil short story writers who embraced modernist perspectives. Following the tradition established by the Manikodi writers, a similar wave of short story authors gained prominence in the 1980s. Among these, S. Ramakrishnan stands out; his works are specifically characterized by their focus on reflecting the current social realities and experiences of the people. In particular, the female characters he portrayed are unique. This research article aims to analyse such female characters based on psychological theory and explain the factors behind their behaviour.*

***KEYWORDS:*** *Psychology, S.Ramakrishnan, Inferiority Complex, Individual Psychology, Stress.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

# எஸ்.ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் தாழ்வு மனப்பான்மைச் சிக்கல்

***முனைவர் ஜெ.அருண் குமார்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம், மனிதர்களின் வாழ்க்கையையும் அவர்களுடைய பண்பாட்டையும் படைத்துக் காட்ட உதவுகிறது. தமிழ் மொழியில் காலத்தின் தேவைக்கு ஏற்ப பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. கவிதை, சிறுகதை, புதினம் எனத் தமிழ் இலக்கியப் பரப்பில் பல வகையான இலக்கியங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சிறுகதை இலக்கியம் தனித்துவம் பெற்றுத் திகழ்கிறது. ஐரோப்பிய இலக்கியத் தாக்கத்தால் தமிழ்ப்படைப்பாளர்கள் இருபதாம் நூற்றாண்டுகளில் சிறுகதைகளைப் படைக்கத் தொடங்கினர். அவர்களுடைய முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் மணிக்கொடி, ஆனந்த விகடன் போன்ற இதழ்கள் சிறுகதைகளை வெளியிட்டன. இதனால் தமிழில் பல சிறுகதைப் படைப்பாளர்கள் தோன்றினர். அவர்களின் சிறுகதைகள் நவீனத்துவச் சிந்தனைகளைக் கொண்டிருந்தன. மணிக்கொடிக் காலச் சிறுகதையாசிரியர்களைப் போன்று 1980களில் பலர் சிற்றிதழ்களில் எழுதிப் புகழ்பெற்றனர். அவர்களுள் எஸ்.ராமகிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவருடைய சிறுகதைகள் மக்களின் நடப்பியல் வாழ்வைப் பிரபதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக, அவர் சித்திரித்த பெண் மாந்தர்கள் தனித்துவமிக்கவர்களாக உள்ளனர். அத்தகைய பெண் மாந்தர்களை உளவியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்ந்து அவர்களுடைய நடத்தைகளுக்குப் பின்புலமாக இருக்கும் காரணிகளை விளக்கிக் கூறுவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**குறிப்புச்சொற்கள்:** உளவியல், எஸ்.ராமகிருஷ்ணன், தாழ்வு மனப்பான்மைச் சிக்கல், தனிநபர் உளவியல், மன அழுத்தம்

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டில் தமிழிலக்கியப் படைப்பாளர்களின் கவனத்தைச் சிறுகதை இலக்கியம் ஈர்த்தது. புதுமைப்பித்தன் தொடங்கி தற்காலத் தமிழ்ப் படைப்பளார்கள் வரை தமிழ்ச் சிறுகதைகளில் புதிய முயற்சிகளைச் செய்து வருகின்றனர். குறிப்பாக, நவீனக் கலை இலக்கியக் கோட்பாடுகளைப் பயன்படுத்திப் பல சிறுகதைகள் தமிழில் எழுதப்ப்படுகின்றன. அவ்வகையில் உளவியல் கூறுகளை உள்ளடக்கிய தமிழ்ச் சிறுகதைப் படைப்புகள் மனித வாழ்க்கையோடு நெருக்கம் கொண்டதாக உள்ளன. குறிப்பாக, பெண்களின் மனநிலைகளைச் சித்திரித்துக் காட்டும் சிறுகதைகள் ஒவ்வொரு காலச் சூழலுக்கும் பொருந்தி வரக்கூடியதாக இருக்கின்றன. குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்களின் உணர்வுகள் புறக்கணிக்கப்படுகின்றன. அத்தகைய பெண்களின் மனநிலையை ‘அவளது வீடு’ என்ற சிறுகதைத் தொகுப்பில் எஸ்.ராமகிருஷ்ணன்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

படைத்துக் காட்டியுள்ளார். இத்தொகுப்பில் இடம்பெறும் 'எம்பாவாய்', 'அவளது வீடு', 'கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது' ஆகிய சிறுகதைகள் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்கள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன. அச்சிறுகதைகளில் இடம்பெறும் பெண் மாந்தர்கள் துயரங்களை எதிர்கொள்ளும் போது சில நடத்தைகளை வெளிப்படுத்துகின்றனர். அத்தகைய நடத்தைகளை உளவியல் கோட்பாட்டைக் கொண்டு ஆராயும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.ராமகிருஷ்ணனின் படைப்புகளும் பெண் மாந்தர் சித்திரிப்புகளும்**

நவீனத் தமிழ்ப் படைப்பாளரான எஸ்.ராமகிருஷ்ணன் 250க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். 'அவளது வீடு', 'சிகப்பு மச்சம்', 'மழைமான்', 'நகுலன் வீட்டில் யாருமில்லை', 'காந்தியோடு பேசுவேன்', 'பதினெட்டாம் நூற்றாண்டின் மழை' ஆகியன அவருடைய குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்புகளாகும். அவர் **சிறுகதை, நாவல், கட்டுரை, திரைப்படம், வரலாறு, நாடகம், மொழிபெயர்ப்பு இவ்வாறான பல்வேறு இலக்கிய வகைகளைப் படைத்துள்ளார். கரிசல் வட்டார பகுதியில் பிறந்தவராக இருந்தாலும் பல நாட்டின் வரலாற்றுப் பக்கங்களைத் தம்முடைய நூலில் கையாண்டுள்ளார். (நாகேஸ்வரி, ப. 277)**

கல்லூரியில் படிக்கும் போது விகடனில் மாணவ பத்திரிகையாளராகப் பணிபுரியும் வாய்ப்பு எஸ்.ராமகிருஷ்ணனுக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பினால் அவருடைய பல சிறுகதைகள் ஆனந்த விகடனில் வெளியாயின. தம் வாழ்க்கை அனுபவங்களைத் தவிர்த்து கதைகளை எழுத வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. தமது சிறுகதைகளில் அவருடைய வாழ்க்கை அனுபவங்களைக் குறைவாகப் பதிவு செய்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

> **"எழுத்தாளனாக இருப்பது என்பது ஒரு பொறுப்புணர்வு. எழுத்தாளன் தனது சிந்தனைகள், படைப்புகள், செயல்பாடுகள் வழியாகச் சமூகத்தை மேம்படுத்துகிறான் என்பதற்காகவே கொண்டாடப்படுகிறான்" (எழுத்தே வாழ்க்கை, ப. 27)**

என்று எஸ்,ராமகிருஷ்ணன் சமூகத்திற்கும் எழுத்தாளனுக்கும் இருக்கும் தொடர்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.ராமகிருஷ்ணன் நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் சிக்கல்களை மையமாக வைத்து பல சிறுகதைகளை எழுதியுள்ளார். அவர் எழுதிய 'அவளது வீடு' என்ற சிறுகதைத் தொகுப்பில் பெரும்பான்மையான சிறுகதைகள், பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டுள்ளன. அவைக் குடும்பத்திலும் சமூகத்திலும் ஆண்களின் ஆதிக்கப் போக்குகளால் பாதிக்கப்படும் பெண்களைச் சித்திரிக்கின்றன.

பெண்களின் மனவுணர்வுகளை மிகவும் நுட்பமாக எஸ்.ராமகிருஷ்ணன் படைத்துள்ளார். அவர் தமது படைப்பு அனுபவம் குறித்து,

> **"குடும்பத்தில் எப்போதும் சில மொழியற்ற நிகழ்வுகள் நடக்குது. யாரும்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

> **பேசிக்கொள்வதில்லையே ஒழிய அதில என்னமோ இருக்கு. அந்த இடத்தை எழுதிப்பார்க்கணும்னு தோணிச்சு. அப்படிதான் என் முதல் தொகுப்பு வெளியானது. கையில் தீப்பெட்டி பசை நிறம் மாறாத பெண்களை, வீட்டைவிட்டு ஓடிப்போனவர்களை எழுதினேன்" (எஸ்.ராமகிருஷ்ணன் நேர்காணல்கள், ப. 10)**

எனக் கூறியுள்ளார்.

எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்த பெண் மாந்தர்களுள் 'நன்மதி', 'அகல்யா', 'கோகிலவாணி' ஆகியோர் ஆணாதிக்க போக்குகளால் மனதளவில் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். ஆண்களின் ஆதிக்கத்தை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கும் அம்மாந்தர்களின் மனவுணர்வுகள் முறையே 'எம்பாவாய்', 'அவளது வீடு', 'கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது' ஆகிய சிறுகதைகளில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

**உளவியல் எடுத்துரைக்கும் தாழ்வுமனப்பான்மைச் சிக்கல்**

மனித மனத்தை அறிந்து கொள்ள உதவுவது உளவியல். "**இது மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற ஓர் அறிவியல்.**" **(ரஞ்சிதா, ப. 382)** ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டில் வேரூன்றிய உளவியல் துறை, தற்காலத்தில் பல்வேறு புதிய கோட்பாடுகளை அறிமுகப்படுத்தி வருகின்றது. அதே போல மனித மனத்தின் செயற்பாடுகளை ஆளுமை சார்ந்த கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதற்கேற்ற கோட்பாடுகளையும் உளவியல் துறை கொண்டுள்ளது. "**ஒரு மனிதனின் ஆளுமைத் திறனை, நடத்தை மாறுபாடுகளை மனத்தின் செயல்பாடுகளின் அடிப்படையில் உளப்பகுப்பாய்வில் விளக்க முடியும்." (இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், ப. 10)** அந்த வகையில் மனிதனின் நடத்தைகளில் முக்கியப் பங்கு வகிக்கும் தாழ்வு மற்றும் உயர்வு மனப்பான்மை குறித்த அட்லரின் கருத்துகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

ஆல்பிரட் அட்லர், தனிமனித உளவியல் (Individual Psychology) குறித்து விரிவாக ஆராய்ந்தவர் ஆவார். அவர் குழந்தைகளின் மனங்களைக் குறித்து ஆராய்வதில் ஆர்வம் காட்டியவர். அவர் மனிதர்களிடையே காணப்படும் தாழ்வுமனப்பான்மை உணர்வு குறித்து ஆராய்ந்து தாழ்வு மனப்பான்மைச் சிக்கலைப் பற்றிய விளக்கங்களைக் கொடுத்தார். குழந்தைப் பருவத்தில் அதிகம் காணப்படும் இந்தத் தாழ்வு மனப்பான்மை உணர்வு வளர்ச்சி அடைந்த பின்பும் ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் நம்பினார். குழந்தைகளிடையே மட்டுமல்லாமல் பெரியவர்களிடமும் தாழ்வுமனப்பான்மை உணர்வு காணப்படும் என்று அவர் விளக்கினார். அதீத தாழ்வு மனப்பான்மை உணர்வு தாழ்வு மனப்பான்மைச் சிக்கலை (Inferiority complex) உருவாக்கும் என்று அவர் மொழிந்தார்.

> **"மனிதனின் செயல்களுக்கு ஃப்ராய்டு குறிப்பிட்டது போல் பாலுணர்வு உந்துதல் மட்டுமே காரணமில்லை எனவும் உயர்வு மனப்பான்மைக்குரிய உந்து சக்தியே மனிதனைச் செயலாற்றத் தூண்டுகிறது என்றும் எடுத்துரைத்தார் அட்லர். தாழ்வு**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**மனப்பான்மையின் எதிர்வினையும் மனித செயல்பாடுகளுக்குக் காரணம் ஆகும் என்கிறார்," (இலக்கியமும் உளவியலும், ப. 10)**

என்ற கருத்து அட்லரின் கோட்பாட்டைப் பற்றி விளக்குகிறது.

மனிதன் தன்னிறைவற்ற நிலையை அனுபவிக்கும் போது தாழ்மனப்பான்மை உணர்வு தோன்றுகிறது. பெரும்பான்மையான குழந்தைகள் தாழ்மனப்பான்மை உணர்வை அனுபவிக்கும் சூழலை எதிர்கொள்கின்றனர். பிற குழந்தைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து தன்னைத் தாழ்வாக உணர்ந்து கொள்ளும் குழந்தை மனதளவில் தாழ்வு மனப்பான்மை உணர்வை அனுபவிக்கிறது. இவ்வுணர்வால் ஏமாற்றத்தையும் மன உளைச்சலையும் அக்குழந்தை எதிர்கொள்ள நேர்கிறது. சமூகத்தில் இருந்து தன்னை விலக்கிக் கொள்ளும் போக்கிற்கு அக்குழந்தை வருகிறது. இந்தப் போக்கு குழந்தைகளிடம் மட்டுமல்லாமல் வளர்ந்த நிலையில் இருக்கும் பெரியவர்களிடமும் காணப்படுகின்றது. தாழ்வு மனப்பான்மை உணர்வு அதிகரிக்கும் போது அது தாழ்வு மனப்பான்மைச் சிக்கலாக மாறுகிறது.

**"ஒவ்வொரு நரம்புக் கோளாறும் தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடவும், உயர்வு மனப்பான்மை அடையவும் முயலும் முயற்சியே. தாழ்வு மனப்பான்மை பெரும்பாலும் குடும்பச் சூழலினாலேயே உருவாகிறது" (இலக்கியமும் உளவியலும், ப. 11)**

என்ற கருத்து தாழ்வு மனப்பான்மைச் சிக்கல் உருவாகும் விதத்தைக் குறிப்பிடுகிறது. இந்தத் தாழ்வு மனப்பான்மைச் சிக்கல் பல நடத்தைகளின் வழி வெளிப்படுகிறது. தம் சுயமரியாதையைக் குறைத்துக் கொண்டு வாழ முயற்சித்தல், தம்மைப்பற்றிய விமர்சனங்களை அதிகளவில் மதிப்பீடு செய்யும் வகையில் நடந்து கொள்ளுதல், குடும்ப உறுப்பினர்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொள்ளுதல், குடும்ப நிகழ்வுகளிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளுதல், தங்களை ஒடுக்கிக் கொண்டு வாழுதல், மனத்தவிப்பு அடைதல், மன அழுத்தம் கொள்ளுதல், போட்டிகளில் பங்கேற்காமல் விலகிக் கொள்ளுதல், தங்களைப் பராமரித்துக்கொள்ள மறுத்தல் ஆகியவற்றின் வழி தாழ்வுமனப்பான்மைச் சிக்கல் வெளிப்படுகின்றது.

**எஸ்.ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் தாழ்வு மனப்பான்மைச் சிக்கல்**

எஸ்.ராமகிருஷ்ணன் படைத்த 'எம்பாவாய்', 'அவளது வீடு', 'கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது' ஆகிய சிறுகதைகள் பெண்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் எதிர்கொள்ளும் சிக்கல்களை மையப்படுத்துகின்றன. இச்சிறுகதைகளில் இடம்பெறும் பெண் மாந்தர்கள் ஆதிக்க மனப்பான்மையால் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர். ஆண்களின் அதிகாரத்தை எதிர்க்க முடியாத அவர்கள் தங்களைத் தாழ்வாக உணர்கின்றனர். இந்நிலை அவர்களுடைய மனங்களில் தாழ்வு மனப்பான்மைச் சிக்கலை ஏற்படுத்துகிறது.

**"நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்கமாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர, வேறு ஒன்றுமே அதில் இல்லை" (பெண்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

**ஏன் அடிமையானாள், ப. 32)**

என்ற பெரியாரின் கருத்தின் படி கணவர்களின் ஆதிக்கப் போக்குகளால் பாதிக்கப்பட்ட பெண்களை **'**எம்பாவாய்' மற்றும் 'அவளது வீடு' ஆகிய சிறுகதைகளில் எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்துள்ளார்**.**

'எம்பாவாய்' சிறுகதையில் இடம்பெறும் நன்மதி தன் கணவனின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்கிறாள். அவள் பொருளாதார ரீதியாகக் கணவனைச் சார்ந்து வாழ்கிறாள். அவளுடைய கணவனுக்குப் பெண்கள் புத்தகங்கள் படிப்பது பிடிக்காது. இருப்பினும், அவள் தன் கணவனுக்குத் தெரியாமல் புதினங்களை அன்றாடம் படித்து வருகிறாள். இச்சூழலில் ஒருநாள் அவள் வாஹினி என்ற எழுத்தாளரின் புதினங்களை வாசிக்கிறாள். அவளுக்கு வாஹினியின் எழுத்துகள் மீது ஈர்ப்பு ஏற்படுகிறது. ஒருமுறை அவளுக்கு வாஹினியின் அறிமுகமும் கிடைக்கிறது. அந்த அறிமுகம் அவர்களுக்கிடையே நல்ல நட்பாக உருவாகிறது. நன்மதி தனக்கும் புதினங்கள் எழுதுவதில் இருக்கும் விருப்பத்தைக் குறித்து வாஹினியிடம் பகிர்ந்து கொள்கிறாள். ஆனால் நன்மதியின் கணவனுக்கு அவள் வாஹினியோடு பழகுவது பிடிக்கவில்லை. தன் அதிகாரத்தை காட்டும் வகையில் அவன் அவளுடைய வாசிப்புப் பழக்கத்தைத் தடுக்க முயற்சிக்கிறான். மேலும் வாஹினின் நட்பையும் முடித்துக் கொள்ள கட்டளையிடுகிறான்.

**"பெண்கள் ஒடுக்கப்பட்டதற்கு அடிப்படை காரணம் பொருளாதார அமைப்பே" (பெண்ணியம், ப. 67)**

என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பொருளாதாரச் சுதந்திரம் இல்லாத நிலையில் வாழும் நன்மதியின் மனம், தன் கணவனின் அதிகாரத்தை எதிர்க்க முடியாத இயலாமையால் தவிக்கிறது. அந்த இயலாமையால் தன்னைத் தாழ்வாக உணர்கிறாள் என்பதை அவள் வாஹினிக்கு எழுதிய கடிதத்தின் வழி அறிய முடிகிறது.

**"வாஹினி, உன்னை பார்த்த மாத்திரத்தில் இருந்து நானும் எழுத முடியுமா எனக் கேட்க வேண்டும் என தோன்றிக் கொண்டேயிருந்தது. ஆனால் கேட்க கூச்சமாக இருந்தது. நீ புறப்படும் போது தயக்கத்துடன் கேட்டேன் நிச்சயம் எழுதலாம் என்று சொன்னாய். கேட்க சந்தோஷமாக இருந்தது. ஆனால் வீட்டிற்கு வந்த பிறகு தான் என்னால் ஒருபோதும் எழுத முடியாது என புரிந்தது. நான் எழுதுவதை ஏற்றுக் கொள்ளவும் புரிந்துகொள்ளவும் இந்த வீட்டில் ஒருவர் கூட கிடையாது…… எனக்கு விருப்பமான ஒரு புத்தகத்தை விலை கொடுத்து நான் வாங்க முடியாத சூழல் தான் உள்ளது. குடும்பச்சுமை என்னைப் போன்ற பெண்களை எழுத அனுமதிக்காது. என்னால் எழுத இயலாது…. என்**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

> **மேல் உண்மையான அன்பு இருந்தால் இனிமேல் கடிதங்கள் எழுதாதே. முடிந்தால் உன் கதையில் என்னை ஒரு கதாபாத்திரமாக்கிவிடு. இனி எனக்கு நீ தேவையில்லை, உன் நாவல்களே போதும்," (அவளது வீடு, பக். 62-63)**

என்று நன்மதி தன் கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டுவதிலிருந்து அவளுடைய மனத்திலிருந்த தாழ்வு மனப்பான்மைச் சிக்கலை உணர முடிகிறது. கணவனின் ஆதிக்கத்தால் அவள் தன் விருப்பங்களை மனத்தில் புதைத்துக் கொண்டு தன்னை ஒடுக்கிக் கொள்கிறாள் என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

> **"பெண்களுக்கான பொருளாதாரச் சுதந்திரமும் சமவாய்ப்பும் சமூகநீதியும் அடிப்படை உரிமைகளாக இருக்கின்றன" (சக்தி, ப. 265)**

இத்தகைய உரிமைகளுள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்ற பெண்களும் கணவர்களின் ஆணாதிக்கத்தை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

'அவளது வீடு' என்னும் சிறுகதையில் இடம்பெறும் அகல்யா, பொருளாதாரச் சுதந்திரம் பெற்ற நிலையில் இருப்பவள். அவளுக்குச் சிறு வயதிலிருந்து பெரிய வீட்டில் வாழ வேண்டுமென்ற விருப்பம் இருந்தது. இருப்பினும் அவளால் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. தன் மனத்தை அமைதிப்படுத்திக்கொள்ள ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்க எண்ணுகிறாள். அதன்படி வேலைக்குச் சென்று திரும்பிய பின், சில மணிநேரம் மட்டும் ஒரு பெரிய வீட்டில் தங்குகிறாள். அதனை அறிந்து கொண்ட அவளுடைய கணவன் அவளைக் கடுமையாகத் தண்டிக்கிறான். அவளுடைய வண்டியை அவன் விற்று விடுகிறான்.

அகல்யா தன் விருப்பத்தைச் சுதந்திரமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாத இயலாமை நிலையால் வருந்துகிறாள். சில நாட்களுக்குப் பிறகு தான் வாடகைக்கு எடுத்த வீட்டைக் கடைசியாகப் பார்க்கச் செல்கிறாள். தான் விரும்பி சில நாட்கள் வாழ்ந்த அந்த வீட்டைக் கண்டவுடன் அவளுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. பொருளாதாரச் சுதந்திரம் பெற்றும் கணவனை எதிர்க்க முடியாத இயலாமையால் உண்டான தாழ்வுமனப்பான்மைச் சிக்கல் அவளுடைய மன அழுத்தத்தின் வழியாக இங்கு வெளிப்படுகிறது.

> **"திடீரென ஒருநாள் மாலை, தான் வாடகைக்குப் பிடித்த வீட்டைப் பார்ப்பதற்காக ஆட்டோவில் போய் இறங்கினாள். யாரோ அந்த வீட்டுக்குக் குடிவந்திருந்தார்கள். குழந்தைகளின் ஆடைகள் கொடியில் உலர்ந்துகொண்டு இருந்தன. வெளியே நின்றபடியே அந்த வீட்டை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தாள்.**
>
> **அந்த வீட்டில் இருந்து வாசனை கசிந்து வந்துகொண்டிருந்தது. அது அவள் வாங்கி வைத்த சந்தன மணம் கமழும் ஊதுவத்தி. அந்த வாசனை அவளுக்குள் ஆழமான**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 02 (Feb -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

**பெருமூச்சையும் அழுகையையும் ஏற்படுத்தியது. கர்சீஃப்பால் கண்களைத் துடைத்தபடியே தெருவில் நடக்க ஆரம்பித்தாள். சாவு வீட்டுக்குப் போய்விட்டுத்திரும்பி வருவதுபோல இருந்தது அவளது நடை,” (அவளது வீடு, ப.22)**

என அகல்யாவின் தாழ்வுமனப்பானமைச் சிக்கல் மன அழுத்தமாக வெளிப்படுவதை அறிய முடிகிறது.

**“குடும்பம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பாலுறவு போன்றவற்றில் ஆண்கள் தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பெண்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர்” (பெண்ணியம், ப. 82)**

குறிப்பாக, பாலுறவு சார்ந்த சூழல்களில் ஆண்களின் வன்முறையால் பெண்கள் உடலளவிலும் மனதளவிலும் பாதிப்பை அடைகின்றனர்.

சமூகத்தில் முன்பின் தெரியாத ஆண்களின் அதிகாரத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணின் மனநிலையை ‘கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது’ என்ற சிறுகதை உணர்த்துகிறது. இச்சிறுகதையில் இடம்பெறும் கோகிலவாணி, துரை என்பவன் தன் மீது கொண்டிருந்த ஒருதலைக் காதலை ஏற்க மறுத்துவிடுகிறாள். அதன் காரணமாக, அவன் அவள் முகத்தில் அமிலத்தை ஊற்றுகிறான். அவனுடைய செயலால் வாழ்க்கையை இழந்த கோகிலவாணி மனதளவில் உடைந்து போகிறாள். தன் உடல் மீது ஆதிக்கம் செலுத்திய துரையின் செயலைத் தடுக்க முடியாத அவளின் இயலாமை உணர்வு அவளை வீட்டிற்குள் ஒடுங்கி வாழ வைக்கிறது. மேலும், அவள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கிறாள். இந்நடத்தைகள் அவள் தன்னைத் தாழ்வாக உணர்ந்ததன் விளைவால் ஏற்பட்டவையாகும்.

**“பாதி எரிந்த முகத்துடன் எலிவால் முடி போல கொஞ்சம் தலைமயிருடன் கோகிலவாணி வீட்டிற்குள்ளாகவே அடைந்து கிடந்தாள். டிவி பார்ப்பது கூட கிடையாது, தலையில் பூ வைத்துக் கொள்வதோ,கண்ணாடி பார்த்து திருநீறுவைத்துக் கொள்வதோ கூட கிடையாது... தினமும் அம்மாவும் அப்பாவும் அவளை வாய்க்கு வாய் திட்டினார்கள். வீட்டின் எந்த விசேஷத்திலும் அவள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவேயில்லை. சிரிப்பை மறந்தவளாக கோகிலவாணி ஒரு நடைப்பிணம் போலவே வாழ்ந்து கொண்டிருந்தாள்,” (அவளது வீடு, பக். 139-140)**

என்னும் கதைசொல்லியின் கூற்று கோகிலவாணி தன்னை ஒடுக்கிக் கொண்டு வாழ்ந்த நிலையை வெளிப்படுத்துகிறது. கோகிலவாணியின் இந்த நடத்தை அவளுடைய தாழ்வு மனப்பான்மைச் சிக்கலை உணர்த்துகிறது.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**முடிவுரை**

எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்த பெண் மாந்தர்களின் நடத்தைகளில் வெளிப்படும் தாழ்வு மனப்பான்மைச் சிக்கல் அம்மாந்தர்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. நன்மதி, அகல்யா, கோகிலவாணி ஆகிய பெண் மாந்தர்களின் தாழ்வுமனப்பான்மைச் சிக்கல் அவர்களுடைய இயல்புகளை மாற்றி. அவர்களின் வாழ்க்கையை முடக்கி விடுகின்றது என்பதை ஆய்வின் வழி புரிந்து கொள்ள முடிகிறது.

**குறிப்புகள்**

[1] காஞ்சனா, இரா. *இலக்கியமும் உளவியலும்*. விஷ்ணுப்ரியா பதிப்பகம், மதுரை, 1997.

[2] சக்தி. *பெண்: புதிய பார்வை*. வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1993

[3] சாரதாம்பாள், செ. *இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் (கொள்கைகளும் பயில்முறைகளும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017.

[4] தந்தை பெரியார். *பெண் ஏன் அடிமையானாள்*. எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2013.

[5] நாகேஸ்வரி, பா., பூங்கோதை, இரா. “எஸ். ராமகிருஷ்ணனின் சஞ்சாரம் நாவல் காட்டும் நாதஸ்வரக் கலைஞர்களின் பண்பாடு.” *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 8, இதழ் 1, ஜீலை 2025, பக். 275-284.

[6] பிரேமா, இரா. *பெண்ணியம்*. பாரி நிலையம், சென்னை, 2021.

[7] ரஞ்சிதா, அ., கிருஷ்ணன், ப. “சங்க இலக்கியத்தில் அரசபெண்பாற்புலவர் பாடல்களின் உளவியல்.” *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 8, இதழ் 1, ஜீலை 2025, பக். 380-388.

[8] ராமகிருஷ்ணன், எஸ். *அவளது வீடு*. தேசாந்திரி பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2020.

[9] ராமகிருஷ்ணன், எஸ். *எழுத்தே வாழ்க்கை*. தேசாந்திரி பதிப்பகம், சென்னை, 2019.

[10] ராமகிருஷ்ணன், எஸ். *எஸ்.ராமகிருஷ்ணன் நேர்காணல்கள்*. தேசாந்திரி பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2018.

**References**

[1] Kanchana, R. *Ilakkiyamum Ulaviyalum*. Vishnupriya Pathipagam, Madurai, 1997.

[2] Shakti. *Pen: puthiya parvai*. Vanjiko Pathipagam, Madurai, 1993.

[3] Saradambal, S. *Ilakkiyamum Ulappaguppaivum (Kolgaigalum payilmuraigalum)*. New Century Book House, Chennai, 2017.

[4] Thanthai Periyar. *Pen yen adimaiyanal*. Ethir Veliyeedu, Pollachi, 2013.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm09012026.30*

[5] Nageswari, P., Poongothai, R. “Culture of Nathaswaram Artists in the Novel Sancharam by S. Ramakrishnan.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 8, Issue 1, July 2025, pp. 275-284.

[6] Prema, R. *Penniyam.* Pari Nilayam, Chennai, 2021.

[7] Ranjitha, A. “Psychology of the Songs of the Royal Family Women Poets in Sangam Literature.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 8, Issue 1, July 2025, pp. 380-388.

[8] Ramakrishnan, S. *Avaladhu veedu*. Desanthri Pathipagam, Chennai, December, 2020.

[9] Ramakrishnan, S. *Ezhuthe vazhkai*. Desanthri Pathipagam, Chennai, 2019.

[10] Ramakrishnan, S. *S.Ramakrishnan Nerkannalgal*. Desanthri Pathipagam, Chennai, 2018.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*

Tamilmanam